**பல்மதுல்ல பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பல்மதுல்ல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தாய்லாந்து வெளிநாட்டுப் பயணத்தில் கலந்துகொண்ட 06 உறுப்பினர்களுக்காகச் செலுத்தப்பட்ட இணைந்த படிப்பணமான ரூபா 230,382 மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு உரித்தான வீதவரியின் பெறுமதி ரூபா 100,847 செலவினத் தலைப்பின் மூலம் ஆண்டிற்கான செலவினத்திற்குச் சீராக்கப்படுவதற்குப் பதிலாக நாட்குறிப்புப் பதிவின் மூலம் திரண்ட நிதிக்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 8,380,000 பெறுமதியான சொத்துக்கள் அன்பளிப்பு ஒதுக்கமாக மூலதனச் செலவினத்திற்கு வருமானத்திலிருந்தான பங்களிப்புக் கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்மதுல்ல நீதவான் நீதிமன்றத்தில் 2014 சனவரி முதல் செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்கு உரித்தான நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானமாக ரூபா 677,333 இனங்காணப்பட்டிருந்ததுடன் இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்திலிருந்து மீளாயாவாண்டிற்கு உரித்தாக எவ்வித வருமானமும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்தில் 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தாக ரூபா 57,583 தொகையான மிகவும் குறைவான பெறுமதியே இனங்காணப்பட்டிருந்தது. இதன் படி, நீதிமன்றத் தண்டப்பணம் பட்டியலிடப்பட்ட ரூபா 2,500,000 வருமானம் மேலதிகப் பட்டியலிடலாகியிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி, மீதிகளினதும் பட்டோலைகளினதும் படியான மீதிகளின் வேறுபாடு ரூபா 53,290,327 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத் 132 (ஒ) ஆம் பிரிவு | அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ஆண்டின் போது சமய இடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 03 சந்தர்ப்பங்களுக்கு உரித்தாக ரூபா 61,250 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 திசெம்பர் 22 ஆம் திகதிய 1/2009 ப.பா.கொ. (திருத்தப்பட்ட) ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | உள்ளூராட்சி நிறுவக அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே உத்தியோகபூர்வ போக்குவரத்திற்காக மாத்திரம் அதாவது, நிர்வாக நடவடிக்கைகளுக்கு நேரடித் தொடர்புடைய கடமைகளை மேற்கொள்வதற்காகச் சென்ற பயணத்திற்காக இணைந்த படிப்பணம் பெற்றுக்கொள்ள இயலுமான போதிலும், தமது கடமை அல்லது கடமைக்கான அங்கீகாரம் தொடர்பாக எவ்வித பதிவோ அல்லது உறுதிப்படுத்தலோ அல்லாது 2014 ஆம் ஆண்டிற்கான இணைந்த படிப்பணமாக தலைவரக்கு ரூபா 89,000 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) (i) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் இலக்கம் 371 (2) | 2013 ஆம் ஆண்டு முதல் 2015 யூன் 22 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 4,125,028 தொகையான முற்பணத் தொகை மீள தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப்பிரமாணம் இலக்கம் 571 — 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புகள் නියාදනය කල යුතු වුවත් 2012 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டிருந்த ரூபா 2,127,645 பெறுமதியான 231 வைப்புகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,742,653 ஆக இருந்ததுடன் அதற்கு இணையாக முன்னைய ஆண்டிற்கான ˙ மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,077,172 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை ரூபா 4,665,480 தொகையால் அதிகரித்திருந்ததுடன் இது 224 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவின குறைவே இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| ------------------- | -------------- | -------------- | -------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| | (000) | (000) | (000) |
| வீதவரியும் வரியும் | 4,431 | 6,779 | 8,307 |
| வாடகை | 1,350 | 1,381 | 1,663 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,352 | 1,593 | 84 |
| ஏனைய வருமானம் | 12,463 | 15,412 | 7,021 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் வீதவரி, சேவைக்களுக்கான கட்டணம் மற்றும் ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பணத்திற்கு உரித்தான மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரித்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் சேகரித்த வருமானம் பாதீடிடப்பட்ட அளவைப் பார்க்கிலும் முறையே 10 சதவீதம், 11 சதவீதம் மற்றும் 53 சதவீதக் குறைவைக் காட்டியது.

**2.3.3 வீதவரி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய ஒரு அலகிற்கு ரூபா 3,000 இற்கு மேலான நிலுவை வீதவரிகளின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,052,953 ஆகக் காணப்பட்டது. நிலுவை வீதவரி அறவிடப்படுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதனப் பரிமாற்றலின் பின்னர் உரிமையாளர்களின் பெயர் மாற்றம் செய்யும் நடைமுறையில் நிலவும் பாரிய தாமதம் பாரிய வீதவரி நிலுவையாகக் காணப்படுவதற்கு முக்கிய காரணமாகியிருந்தது.

**2.3.4 ஏக்கர் வரி**

2015 யூன் 22 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கிருந்த நிலுவையான ஏக்கர் வரி ரூபா 62,591 ஆகக் காணப்பட்டது.

**2.3.5 வாடகை**

சபையிடம் இருந்த கடைகளில் இருந்து பல வருடகாலமாக தொடர்ந்து வருமானங்கள் தாமதமாகியிருநத நிலுவையான கடை வாடகை ரூபா 297,368 ஆகக் காணப்பட்டது.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் ஒக்டோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு உரித்தான தண்டப்பணத்தை அறவிடப்படுவதற்காக உரிய பட்டோலைகளும் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு உரித்தான முத்திரைக் கட்டணங்களும் பட்டோலைகள் தருவிக்கப்பட்டு குறித்த வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட காணி வழக்கிற்கு உரித்தான உத்தரவிடப்பட்ட நீதிமன்ற தீர்வின் படி குற்றம் சாட்டப்பட்ட தரப்பினராக சபை குறித்த வகையில் நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்காமை மற்றும் தெளிவாக்கங்களை முன்வைக்கத் தவறியமையால் விசாணைக் கட்டணமாக ரூபா 10,000 தொகையைச் செலுத்துவதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. நீதிமன்றச் செயற்பாடு தொடர்பாக சபை முறையான கவனம் செலுத்தியிராத காரணத்தால் இவ் விசாரணைக் கட்டணத்தைச் செலுத்த நேரிட்டுள்ளமையும் இது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்களிடம் இருந்து அத் தொகை அறவிடப்படுவதற்கோ அல்லது இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டோ இருக்கவில்லை.

(ஆ) சபைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள 22 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஊழியர்களிடமிருந்தும் அறவிடுவதற்காக இருந்த ரூபா 159,171 தொகையான கடன் மீதி பல வருட காலமாக அறவிடப்பட முடியாதிருந்தது.

## 3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாதீட்டு பொதுக்கூட்டத்தில் பதவியணி மற்றும் உறுப்பினர்களுக்கான உபசாரச் செலவினமாக ரூபா 75,000 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

(ஆ) மின் வலு மற்றும் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய PE/01/01 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, கிராமப் பிரதேசத்தில் ''ஏ'' தரத்திலான வீதிகளில் வியாபாரப் பிரதேசத்தில் உள்ள மின்கம்பம் ஒன்றில் ஆகக் கூடுதலாக 110 வொட் அதி பீடன சோடியம் வேபர் விளக்குகள் பயன்படுத்தப்படக் கூடிய போதிலும் 250 வொட் கிரோபா 05 தொகுதி தெரு விளக்குகள் ரூபா 47,500 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டு 05 இடங்களில் பொருத்தப்பட்டிருந்தன.

## 3.3 வெளிநாட்டுப் பயணச் செலவினங்கள்

------------------------------------------------------------

திண்மக் கழிவு முகாமைத்துவ தொழிநுட்பம் தொடர்பாக கல்வி மற்றும் பழக்க அவதானிப்பிற்காக 2014 நவம்பர் 02 முதல் 07 ஆம் திகதி வரைய மலேசியாவில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தலைவரும் 05 உறுப்பினர்களும் குறித்த அழைப்புக் கடிதம் ஒன்று கிடைக்காது தனியார் நிறுவகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மின்னஞ்சல் முகவரியைச் சார்ந்து ரூபா 130,000 படி ரூபா 780,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு கலந்துகொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

i. வெளிநாட்டிற்குச் செல்ல முன்னர் குறித்த லீவு ஆளுனரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. சுற்றுலாவிற்கான செலவினத்தில் ஓர் பகுதி மாத்திரம் சபை நிதியத்திலிருந்து ஏற்கப்படுவதற்கு தலைமை அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், சுற்றுலாவிற்கான மொத்தத் தொகையும் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

iii. ''உள்ளூராட்சித் தலைவர் ஒருவர், பிரதிநிதி அல்லது உறுப்பினர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படின் குறித்த அமைப்பு அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது வெளிநாட்டு நிறுவகம் அல்லது இதற்காகச் செலவிடும் சகல செலவினத்தையும் வசதிகளையும் ஏற்க வேண்டும் என'' குறிப்பிடப்பட்டு உள்ளூராட்சி, மாகாண சபை அமைச்சுச் செயலாளரின் 2010 செப்தெம்பர் 09 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை தொடர்பாக கருத்திற்கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

iv. பயிற்சி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவை உள்நாட்டு ரீதியாகப் பயன்படுத்தும் விதம் குறித்து ஓர் அறிக்கை பயிற்சி முடிவுற்று ஓர் மாதத்திற்குள் வழங்க வேண்டிய போதிலும், அத்தகைய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்றதும்/ குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

சபைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள சிங்கிள் டிரம் வைபரேடிங் இயந்திரமும் டிபர் வாகனமும் சபைத் தேவைப்பாட்டிற்கு இணங்காது பிரதேச சபை வீதியில் பயணிக்க முடியாமையால் போதிய பயன்பாடு இல்லாது சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபை நிதியைப் பயன்படுத்தி ரூபா 300,000 தொகையான மதிப்பீட்டில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்த நீலகம வீதி அபிவிருத்தி துறைக்காகக் குறிப்பிடப்பட்டிருந்த எல்லைகளுக்கு அப்பால் உள்ள வீதியில் இறப்பர் தோட்டத்தில் நீர் வழிந்தோடும் கால்வாயில் கொங்கிரீட் கால்வாய் நிர்மாணிக்கப்பட்டு இதன் மீது

பாலம் ஒன்றின் வடிவில் இவ் வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2015 யூன் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. 2015 யூன் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதியின் உரிமை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பூரணமான நிர்மாணிப்பிற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராததுடன் 44 அடி நீளமான ஓர் பகுதி மாத்திரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான முற்பணமாக ரூபா 60,000 செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இயற்கை நீர் வழியிடையே இவ் வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ளதன் மூலம் அதன் இயற்கை நீர் வழியின் இயற்கையாக வழிந்தோடுவதற்கான தடை அல்லது இந் நிர்மாணிப்பு பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டதன் மூலம் ஏற்படக்கூடிய அனர்த்தத் தாக்கங்கள் குறித்த தரப்பினரால் உரிய நேரத்தில் இனங்காணப்பட்டமைக்கு எவ்வித சான்றும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாரங்கொட நிதன்கல போதி விகாரைக்கு அருகாமையில் சிறிய ஓர் பாலம் நிர்மாணிக்கப்பட்டமை

---

சுப்ரகமுவ மாகாண சபை நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,650,000 பெறுமதியான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு அத் துறை தொடர்பாக 2015 யூன் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) பாலத்தின் கொங்கிரீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு வேலை இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன், பாலத்தினால் பயணிப்பதற்குத் தேவையான கொங்கிரீட் தட்டு நிர்மாணிக்கப்பட்டிராமையால் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பகுதிகளாலும் எவ்வித பயனும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) பாலத்திற்கு நுழையும் வீதியின் இரு மருங்கிலும் கிட்டிய 02 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையால் நுழைவுப் பாதையில் 2.5 மீட்டர்கள் அளவில் ஒடுங்கிக்காணப்பட்டது. ஒரு கட்டிடத்தின் கொங்கிரீட் தட்டு மற்றும் மற்றைய பக்கத்துக் கட்டிடத்தின் தட்டு வீதிக்கு சரிந்தவாறு நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் வழிப்பாதையின் பயன்பாடு மேலும் வரையறுக்கப்பட்டிருந்தது.

## 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------------

பிரதேச சபையால் நடாத்தப்பட்டு வரும் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம் தொடர்பாக 2015 யூன் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பை, நிர்மாணிக்கப்பட்டுள்ள மண்டபங்கள் இரண்டிலும் தேக்கப்பட்டிருந்தமையால் அக் குப்பைக் குவியலில் இருந்து மண்டபம் இதுவரையிலும் நிறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எதிர்காலத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மீள்சுழற்சிச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதற்கான இட வசதிகள் போதியளவில் இருக்கவில்லை.

(ii) கழிவுப் பொருட்கள் கலக்கப்பட்ட நீர் (லீசெட்டி) சேகரிக்கப்படும் தாங்கிகள் போதாமையும், அதன் நீர் சுத்திகரிப்பு நடவடிக்கை சரியாக மேற்கொள்ளப்படாமையும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக சேகரிக்கப்படும் நீர் இயந்திரத்தின் மூலம் மீள அண்மையில் உள்ள சூழலுக்கு பாதுகாப்பற்ற முறையில் விடுவிக்கப்படுவதன் மூலம் வேறு சுற்றாடல் மாசடைவிற்கு வழிவகுத்திருந்தது.

(iii) கழிவுப் பொருட்களால் உற்பத்தியாகும் புழுக்கள் அருகில் உள்ள சுற்றாடலில் காணக்கூடியதாக உள்ளதுடன் அப் பிராணிகளைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை போதாதிருந்தது.

(iv) செயற்திட்டத்தின் கடமையில் ஈடுபடும் ஊழியர்களும் குப்பைகளைப் பிரித்தெடுப்பதற்கு கைகளைப் பயன்படுத்தி வருவதுடன் அப்

பாதுகாப்பற்ற செயற்பாட்டின் மூலம் சுகாதாரச் சிக்கல்கள் ஏற்படும் அபாயம் நிலவுகின்றது.

(v) சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் நிலத்தில் தேக்கிவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் விற்பனை தொடர்பாக முறையான பதிவு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) மிகவும் துக்ககரமான சுற்றாடல் பிரச்சனைக்குத் தீர்வாக ஆரம்பிக்கப்பட்ட இக் கழிவுப் பொருள் செயற்திட்டத்திற்கு உரித்தாக போதிய வசதிகள் இன்னமும் கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்